**INDIAN JOURNAL OF TAMIL** | Volume 1 | Issue 2

இந்திய தமிழ் ஆய்விதழ்

Check for updates

RESEARCH ARTICLE

# சேக்கிழாரின் பல்திறன்

**மு. கயல்விழி** [அ]

[அ] தமிழ்த் துறை, பச்சையப்பன் மகளிர் கல்லூரி, காஞ்சிபுரம்-631502, தமிழ்நாடு, இந்தியா.

# Versatile of Chekkizhar

**M. Kayalvizhy** [a, *]

[a] Department of Tamil, Pacchiyappas College for Women, Kancheepuram-631502, Tamil Nadu, India.
*Corresponding Author Email: kayalarul22@gmail.com
(Received: 05th March 2020; Accepted: 24th May 2020)
DOI: http://doi.org/10.34256/ijot2021

**Abstract:** Chekkizhar was a great poet in the medieval period of Tamil Nadu. He wrote his master piece work Periya Puranam which has considered as a greatest work in Tamil language. In this work the various skills of Chekkizhar has been exposed. He shows his mastery in the field of literature, fine art, medicine, law and history. As a chief minister of Chola empire he had various skills in the field politics, literature, art and architecture. He shows many of his skills in his work and for that his work is considered as a classical ever green master piece. Even though he wrote only one book it is enough to reveal his skills in the field of art. For that only he was compared with great scholars like Thiruvalluvar, Elangovadigal, and Kambar.

**Key Words:** Chekkizar, Great Poet, Various skills, Master Piece, Genius and skill

## முன்னுரை

"தொண்டை நாடு சான்றோர் உடைத்து"

என்பது முதுமொழி. இச்சான்றோர்கள் நிறைந்த தொண்டை நாட்டைச் சார்ந்தவர் சேக்கிழார் பெருமான். இவர் பரந்த சோழப் பேரரசின் முதலமைச்சர் என்ற உயரிய பதவியை அலங்கரித்தவராவார். சோழப் பெருவேந்தன் இரண்டாம் குலோத்துங்க சோழனின் அமைச்சராகப் பணியாற்றிய. பெருமையுடையவர். அவ்வுயரிய பதவிக்கேற்ற திறமையும், தகுதியும், அறிவும், ஆற்றலும் ஒருங்கே கொண்டவராகத் திகழ்ந்தார். அவர் சோழ நாடு முழுவதும் பயணம் செய்து பரந்த உலக அனுபவம் கொண்டவராகத் திகழ்ந்தார். அடிப்படையில் அவர் ஒரு சிறந்த கவிஞராவார். அரசுப் பணியும், கவிப் பணியும் ஒருங்கே புரிந்து சிறப்பு பெற்றவர். கடுமையான அரசு அலுவல்களுக்கிடையே இலக்கியப் பணியும் புரிந்து அருஞ் சாதனை படைத்தார். அவருக்குள் இருந்த பல்வகையான திறன்கள் அவரது படைப்பான பெரிய புராணத்தில் வெளிப்பட்டன.

பல்துறையில் அவருக்கு இருந்த அறிவும், ஆற்றலும் அவருடைய நூலில் பளிச்சிடுகின்றன. அவர் ஒரு சிறந்த அரசியல் மேதையாக இருந்த போதிலும் அவருள் ஒரு கலை மேதையும் வாழ்ந்தார். அவரது ஒப்பற்ற படைப்பான பெரிய புராணம் இலக்கிய வளமும், கருத்து நலனும், பொருட் சுவையும், அறிவுச் சிறப்பும், பலவிதத் திட்ப நுட்பங்களும் கொண்டதாகத் திகழ்வதால் சேக்கிழாரைத் தமிழில் தோன்றிய மாபெரும் இலக்கிய மேதைகளான திருவள்ளுவர், இளங்கோவடிகள், கம்பர் போன்றோரோடு ஒப்பிட்டுப் பேசுகின்றனர். அவரது பல்திறன் வெளிப்பாடு அவரது படைப்பு சிறக்கக் காரணமாயிற்று. சேக்கிழாரின் பல்வகைத் திறன்களைப் பற்றி ஆராய்வதென்பது தமிழர்களின் பல்வகை ஆற்றல்களை அல்லது மேதமைப் பண்புகளை ஆராய்வதாகவே கொள்ளவேண்டும். சேக்கிழாரின் சிறப்பு வாய்ந்த பல்வகைத் திறன்களை ஆராய்ந்து வெளிப்படுத்துவதே இவ்வாய்வின் முதன்மை நோக்கமாகும்.

## இசைக் கலை

இசை மனித மனதை வசப்படுத்தி இன்புறுத்தும் இயல்புடையது. எனவே நம் முன்னோர்கள் இசையை எப்போதும் போற்றி வந்தனர். சங்கக் காலம் முதல் இசைக்கலை சிறப்புற்ற போதிலும் அது பற்றிய தகவல்கள் காப்பியக் காலத்தில் தோன்றிய சிலப்பதிகாரத்தின் மூலமாகவே முழுமையாக அறிய முடிகின்றது. பல்லவர் காலத்தில் தோன்றிய பக்திப் பாக்களான பன்னிரு திருமுறைகளும், நாலாயிர திவ்வியப் பிரபந்தங்களும் இசையோடு ஓதப்பட்டன. சேக்கிழார் பெருமான் இசை அறிவு மிக்கவராகத் திகழ்ந்தார். இவரது இசையறிவை பெரிய புராணத்தில் நன்கு காணலாம். தேவாரம் மற்றும் திருவாசக நூல்களில் இயைந்து காணப்படும் இசையை நன்கறிந்து தேவையான இடத்தில் அவற்றின் நுட்பங்களை வெளிப்படுத்துகின்றார். சுந்தரமூர்த்தி நாயனார் இறைவனால் தடுத்தாட் கொண்ட நிலையில் பக்திப் பரவசமாகித் திருவெண்ணை நல்லூரில் “பித்தா பிறைசூடி” என்ற பாடலைப் பாடிய நிலையைக் குறிப்பிட வந்த சேக்கிழார் இது “இந்தளம்” என்ற ராகத்தில் அமைந்தது என்று கூறித் தன் பண்ணறிவை வெளிப்படுத்துவார். ஆனாயர் புராணத்திலும் தமது இசைத் திறமையை நன்கு வெளிப்படுத்தி நிற்கின்றார். ஆனாயர் புல்லாங் குழலுக்காக மூங்கிலைத் தேர்ந்தெடுக்கும் முறையும், அதைச் செய்யும் வழிமுறைகளையும், அவ்விசை கருவியைக் கொண்டு இசைபாடும் முறைகளையும் அழகுடன் எடுத்துரைக்கின்றார் (Subramanya Mudaliar CK., 1937).

## நடனக் கலை

கலைகளில் சிறந்த நடனக் கலையைச் சேக்கிழார் நன்கு அறிந்திருந்தார். இதை நாவுக்கரசர் புராணத்தின் வாயிலாக வெளிப்படுத்துகின்றார். நாவுக்கரசர் திருப்புகலூரில் வாழ்ந்து வரும் காலத்தில் அவரது பக்தி உள்ளத்தைப் பரிசோதிக்க எண்ணிய இறைவன் தேவலோக நடன மாதர்களை அனுப்பி அவர் முன் நடனமாடச் செய்து திருவிளையாடல் நிகழ்த்தினான். அம்மாதர்கள் அவர் முன் தோன்றி ஆடல், பாடல் கலைகளை நிகழ்த்துவித்தனர். இந்நிகழ்வைக் கூறப்போந்த சேக்கிழார் பெருமான் அந்நடன மாதர்கள்

மூலம் தம் நாட்டியக் கலையறிவை வெளிப்படுத்துகின்றார் (Subramanya Mudaliar CK., 1960).

"வானகமின் னுங்கொடிகள் வந்திழிந்தால் எனவந்து

தானநிறை சுருதிகளின் தருமளங்கார ரத்தன்மை

கானஅமு தம்பரக்கும் கனிவாயில் ஒளிபரப்பப்

பானல்நெடுங் கண்கள்வெளி பரப்பி இசைபாடுவார்"

(அப்பர் புராணம்-419)

கண், கை, கால் ஆகிய இம்மூன்று உறுப்புகளும் இணைந்து அகப்பொருள் காட்டி இன்புறுத்துவதே நாட்டியம் என்ற கருத்தை வெளிப்படுத்துகின்றார். ஆடலின் நுட்பம் நிறைந்த நிகழ்வுகளை இவ்விடத்தில் வெளிப்படுத்திக் காட்டுகின்றார். பாதங்கள் சைகை செய்ய, கை வட்டகையோடு பெயர, கண் கையின் வழி பெயர இந்நடனம் நிகழ்த்தப் பெற்றதாக நடனப் பாவங்களை அழகுடன் எடுத்துரைக்கின்றார்.

"கற்கப்பூந்த தளிரடிபோய்க் காமருசா ரிகைசெய்ய

உற்பலமென் முகிழ்விரல்வட்ட ணையோடுந் கைபெயரப்

பொற்புறுமக் கையின்வழிப் பொருகயற்கண் புடைபெயர

அற்புதப்பொற் கொடிநுடங்கி ஆடுவபோல் ஆடுவார்"

(அப்பர் புராணம்-420)

இவற்றால் பண்டைய நாடகக்கலை வல்ல நூலான சிலப்பதிகாரம் போன்ற நூல்களை அவர் நன்கு பயின்று, அவற்றின் நுட்பங்களை நன்கறிந்தவராய் இருத்தல் வேண்டும் என்பது புலனாகின்றது (Mahadeva Mudaliar W., 1970).

## வானியல் அறிவு

சேக்கிழார் வானியல் நுட்பம் நன்கு அறிந்தவராகவும், வானியல் கலையில் மேதமை கொண்டவராகவும் திகழ்ந்தார். வானவியல் பற்றிய தன்னுடைய அறிவைப் பெரிய புராணத்தில் பல்வேறு இடங்களில் வெளிப்படுத்துகின்றார். சம்பந்தர் திருவலஞ்சுழியில் தங்கியிருந்த போது இளவேனில் முதுவேனில் ஆயிற்று என்கின்றார். இதையே சற்று விளக்கமாக "சூரியன் மிதுன ராசியிலிந்து வெங்கதிர் பரப்பினான். எனவே இதுவே முதுவேனில் காலத்தின் தொடக்க மாயிற்று" என்கின்றார்.

"மகிழ்ந்த தன்தலை வாழுமந் நாளிடை வானில்

திகழ்ந்த ஞாயிறு துணைப்புணர் ஓரையுட் சேர்ந்து

நிகழ்ந்த தன்மையில் நிலவுமேழ் கடல்நீர்மை குன்ற

வெகுண்டு வெங்கதிர் பரப்பலின் முதிர்ந்தது வேனில்"

(சம்பந்தர் புராணம்-384)

மிதுன ராசி இரட்டை ராசி என்பதால் இதை "துணை புணர் ஓரை" என்று குறிப்பிட்டுத் தன் வானியல் அறிவை வெளிப்படுத்துவார். இது தவிரப் பல்வேறு பருவங்களான கார்காலம், பனிக்காலம், இளவேனில் காலம் போன்ற பருவங்களையும் நன்கு விளக்கிச் செல்கின்றார் (Subramanya Pillai ka., 1963).

## மருத்துவக் கலை

சேக்கிழார் மருத்துவ நுட்பங்களை நன்கறிந்திருந்தார். தம் நூலில் அக்காலத்தில் நிலவிய பலவிதமான நோய்களையும் அதைக் குணப்படுத்தும் வழிமுறைகளையும் குறிப்பிடுகின்றார். ஒரு சிறந்த மருத்துவ நிபுணரைப் போன்று நோய் தோன்றும் அறிகுறி குறித்தும், நோயின் தாக்கம் குறித்தும், நோயின் வேகம் குறித்தும், அதன் விளைவுகள் குறித்தும் அறிவிக்கின்றார். மேலும் நோயைக் குணப்படுத்தும் வழிமுறைகள் குறித்தும் நோய்க்கான மருந்துகள் போன்றவற்றையும் விளக்கமாகக் கூறிச்செல்கின்றார்.

## பாம்பு கடி

பெரிய புராணத்தில் பாம்பினால் தீண்டப்பட்ட அப்பூதியடிகளின் மகனின் உடலில் நஞ்சு ஏறி அவன் உயிர் துறந்த நிகழ்வைப் பற்றி குறிப்பிடும் போது "எரிவிடம் முறையே ஏறித் தலைக் கொண்ட ஏழாம் வேகம்" என்று உரைத்து "அம்மகனுடைய பல், கண், உடல் போன்றவை கருகித் தீய்ந்தன, உரை குழறியது, ஆவி விடங்கொண்டு மயங்கி விழுந்தான்" என்று பாம்பு கடி குறித்து விரிவாக எடுத்துரைக்கின்றார்.

## கண் நோய்

கண் நோய்க்கு அக்காலத்தில் மூலிகை வைத்தியம் செய்யப்பட்டது. பலவிதமான அரிய மூலிகைகளைக் கொண்டு வந்து அவற்றை ஒன்றாகக் கலந்து இடித்துச் சாறு பிழிந்து கண்களுக்கு விட்டுக் கண் நோயைக் குணப்படுத்தினர். இவ்வைத்திய முறையையே சேக்கிழார் குறிப்பிடுகின்றார். நந்தியாவட்டை மலரின் சாறு, தேள் கொடுக்கு இலையின் சாறு, பிரமதண்டுப் பால் முதலியவற்றை ஒன்றாகக் கலந்து அவற்றின் சாறு கொண்டு கண் நோயைக் குணப்படுத்தும் முறையை விளக்குகின்றார்.

## வெப்பு நோய்

அக்காலத்தில் நிலவிய கொடிய நோயான வெப்பு நோயைப் பற்றியும் விளக்குகின்றார். இந்நோய் பாண்டியன் நெடுமாறனுக்கு வந்து துன்புறுத்தியது. இது ஞானசம்பந்தரால் ஏவப்பட்டது. "அஃது அரசனுக்கு உடல் நடுக்கத்தையும் கொடிய உஷ்ணத்தையும் உண்டாக்கித் துன்புறுத்தியது. மருத்துவர்களால் அதனை ஒழிக்க முடியவில்லை. அரசன் வாய் பிதற்றலானான்" என்று இந்நோய் பற்றி விவரிக்கின்றார்.

## சூலை நோய்

இது ஒரு கொடிய வயிற்று நோயாகும். மனித உடலில் தோன்றும் வாதம், பித்தம், கபம் போன்ற நாடிகளின் மாறுபாட்டால் இந்நோய் தோன்றியது. நாவுகரசர் பெருமானுக்கு இந்நோய் தோன்றி உடலை வருத்தியது (Rasamanikkam Pillai Ma., 2002).

"தோற்றாதென் வயிற்றி னகம்படிளே
குடரோடு துடங்கி முடக்கிலிட
ஆற்றேன்"
"வலிக்கின்றது சூலை தவிர்தருளீர்
பயந்தேயென் வயிற்றி னகம்படியே
பறித்துப்புரட் டியறுத் திடநான்
அயர்ந்தேன்"
"கலித்தேயென் வயிற்றி னகம்படியே
கலக்கிமலக் கிட்டு கவர்ந்துதின்ன
அலுத்தேன்"
"வேர்த்தும் புரண்டும் விழுந்தும் எழுந்தால்
என்வேதனை யான விலக்கியிடாய்"

என்று நாவுக்கரசர் வாய்மொழி மூலமாக இந்நோயின் கொடுமையை விளக்குகின்றார். இக்கொடிய நோயின் வேனையை மேலும் கீழ்க்கண்ட பாடல் மூலம் விவரிப்பார்:

"கடுங்கனல்போல் அருங்கொடிய
மண்டு பெருஞ்சூலை அவர் வயிற்றினிடைப் புக்கதால்
அடைவிலமன் புரிதரும் சேனர்வயிற் றடையும் அது
வடஅனலும் கொடுவிடமும் வச்சரமும் பிறவுமாம்
கொடிய எனலாம் ஒன்றாகும் எனக்குடரின் அகங்குடையப்
படருழந்து நடுங்கிஅமண் பாழியறையிடை விழுந்தார்
உச்சமுற வேதனைநோய் ஓங்கியெழ" (அப்பர்; புராணம்:49-51)
"கொல்லாது சூலைநோய் குடர்முடக்கித் தீராமை
எல்லோரும் கைவிட்டனர்" (அப்பர் புராணம்-57)

இவரைத் தவிரக் கலிக்காம நாயனாரையும் இந்நோய் வருத்திற்று. இந்நோய் வந்தால் வயிற்றுக் குடைச்சல், வயிற்றுப் இரைச்சல், நாவறட்சி, மூர்ச்சையடைதல், வயிற்று பொருமல், உடல் மந்தம், கபம், பெருமூச்சு, விக்கல் போன்றவை தோன்றி உடலினை வருத்தும் என்று விவரிக்கின்றார் (Gnana Sammanthan AS., 1987).

## முயலகன் நோய்

இந்நோயைப் பற்றியும் சேக்கிழார் நன்கு அறிந்திருந்தார். கொல்லி மழவன் மகள்

இந்நோயால் வருந்தினாள் என்கின்றார். இது பெரும் பிணி என்றும் அதிக மெய்வருத்தத்தைத் தரக்கூடியது என்றும் மனிதனை மூர்ச்சை அடைவிக்கக்கூடியது என்றும் உரைக்கின்றார். இந்நோயின் கொடுமையைக் கண்டு உற்றார் உறவினர் வருந்திக் கண்ணீர் விட்டனர் என்கின்றார். இந்நோயை இன்று "குமரக் கண்ட வலிப்பு' என்று உரைக்கின்றனர்.

## உடல்கூறு புலமை

மனித உடலைப் பற்றிய அறிவியலான உடல் அறிவியலில் சேக்கிழார் மிகுந்த புலமை கொண்டோராய்த் திகழ்ந்தார். மனித உடலில் உள்ள எலும்பு, தசை, நரம்பு, ரத்தம் போன்றவற்றைப் பற்றி நன்கறிந்திருந்தார். மூர்த்தி நாயனார் புராணத்தில் தம் முழங்கையைச் சந்தனம் அரைப்பதற்காகப் பாறையில் தேய்த்தபோது கட்டும் புறத்தோல் நரம்பெங்கு கரைந்து தேய்ந்தன என்கின்றார்.

"நட்டம்புரி வாரணி நற்றிரு மெய்ப்பூச் சின்று

முட்டுமபரி சாயினுந் தேய்க்குங்கை முட்டா தென்று

வட்டந்திகழ் பாறையின் வைத்து முழங்கை தேய்த்தார்

கட்டும்புறந் தோல்நரம் பென்பு கரைந்து தேய" (மூர்த்தியார் புராணம்-20)

மனித உடலில் உள்ளே உள்ள எலும்பு, நரம்பு, தசை, ரத்தம் போன்றவை ஒன்றாகப் பொதிந்திருந்தன என்றும் மேலே கட்டிய புறத்தோல் முதலில் தேய்ந்து பின்னர் நரம்பும் அறுந்து விழுந்தது. பின்பு எலும்பும் தேய்ந்து போயிற்று என்று உடலமைப்பின் முறையை நன்கு விளக்குகின்றார்.

"கல்லின்புறந் தேய்ந்த முழங்கை கலுழ்ந்து சொரி

செல்லும்பரப் பெங்ஙனும் என்பு திறந்து மூளை

புல்லும்படி கண்டு பொறுத்திலர் தம்பி ரானார்

அல்லின்கண் எழுந்தது வந்தருள் செய்த வாக்கு" (மூர்த்தியார் புராணம்-21)

மேலும் அப்பர் புராணத்தில் அப்பர் கைலை மலையில் தன் இறுதிக் காலத்தில் உடல் நலம் குன்றி வருந்திய போது உடற் கூற்றின் இயல்பைச் சேக்கிழார் பெருமான் வெளிப்படுத்துவார்.

## நீதிநூல் புலமை

சேக்கிழார் பெருமான் தென்னிந்தியாவின் பரந்த சோழப் பேரரசின் முதலமைச்சராவார். எனவே அவர் அரசியல் அறிவும், நீதிநூற் புலமையும், அனுபவ அறிவும் நிரம்பியவராக விளங்கினார். இதைத் தம் நூலில் பலவிடங்களில் வெளிப்படுத்துகிறார். ஆட்சி, ஆவணம், அயலவர் சான்று, படி ஓலை, மூல ஓலை, அரண் தருகாப்பு, கரணத்தான், மறையவர் அவை போன்ற அக்கால நீதிமன்றத்தின் உறுப்புகளைப் பட்டியலிட்டுக் காட்டுகின்றார். நாவுக்கரசர் புராணத்தில் அக்கால நீதிமன்றங்களின்

நிலையைப் படம்பிடித்துக் காட்டுகின்றார். கிழ வேதியரை மனிதராகக் கொள்ளுமாறு செய்து அக்கால நீதிமன்ற நிகழ்வுகளை நமக்கு எடுத்துரைக்கின்றார். மேலும் அக்காலத்தின் சட்ட முறைகளைக் கண்ணப்ப நாயனார் புராணத்திலும் எடுத்தோதுகின்றார். கண்ணப்பருடன் சென்ற வேடுவர்கள் உடுக்கை போன்ற கால்களையும், படர்ந்த காதுகளையும் உடைய யானைக் கன்றுகளையும், சிறிய விலங்குகளின் குட்டிகளையும், தள்ளாடி வரும் சூல் கொண்ட விலங்குகளையும் வேட்டையாடாமல் விட்டுச் சென்ற நிகழ்வை எடுத்துரைக்கின்றார். உடல் பலகீனமான விலங்குகளை கொல்லக்கூடாது என்று அக்காலத்தில் நிலவிய சட்ட முறைகளை எடுத்துரைத்துத் தன் நீதிநூல் புலமையை எடுத்துக்காட்டுகின்றார்.

சிவபெருமான் திருநாவுக்கரசரை ஆட்கொள்ள மறையவர் வேடத்தில் வந்து சுந்தரரின் பாட்டனார் தமக்கு வழி வழி அடிமை செய்வதாகப் பத்திரம் ஒன்று எழுதித் தந்தார் என்றும். அதன்படி அவர் தமக்கு அடிமை என்றும் உரைக்கின்றார். அவர் கையில் ஒரு படி ஓலை இருந்தது. அதன் மூல ஓலை திருவெண்ணை நல்லூர் அரண் தருகாப்பில் இருந்தது. ஓலையை அக்காலக் கிராம நீதிபதிகளாக விளங்கிய ஊர் அவையில் கரணத்தான் வாசிப்போனாக இருந்தான் என்கின்றார். இவ்வழக்கு விசாரணையில் வாய்மொழிச் சான்று, அயலவர் சான்று, ஆவணச் சான்று போன்றவை விசாரிக்கப்பட்டு மறையவர் அவையால் நீதிவழங்கப்பட்டதாக எடுத்துரைக்கின்றார். இவ்வாறு நீதி மற்றும் சட்ட அறிவு மிக்கோராய் அவர் திகழ்ந்தார்.

## வரலாற்று திறன்

சேக்கிழார் மிகுந்த வரலாற்று உணர்வுடையவராகத் திகழ்ந்தார். இல்லையேல் நாயன்மார்களின் வரலாற்றை அவரால் இவ்வளவு சிறப்புடன் இயற்றி இருக்கவியலாது. நயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றைப் பாடுவதற்காகத் திருமுறைகள், கல்வெட்டுகள், தமிழ் நூல்கள், வடமொழி நூல்கள், சமண, பௌத்த நூல்கள், ஓவியங்கள், சிற்பங்கள், செவிவழிச் செய்திகள் போன்ற அனைத்து ஆவணங்களையும் சேகரித்து நன்கு பரிசோதித்துப் பெரிய புராணத்தை இயற்றினார். தன் நூலில் முன்னோர் குறிக்காத பல செய்திகளைச் சிறப்புடன் விளக்குவார். மேலும் முன்னோர் உரைத்தவற்றைத் தெளிவுபடுத்தியும் செல்வார். சிலவிடங்களில் முன்னோர் கூற்றுக்கு மாறாக உரைப்பார். வரலாற்று சிறப்புடைய நாயன்மார்களின் வாழ்க்கை வரலாற்றை உண்மையாக எடுத்துரைக்கப் பலவித வரலாற்று மூலங்களைத் தன் நூலில் பயன்படுத்தியுள்ளார். பிற ஆசிரியர்கள் கூறாத பல அரிய உண்மைகளைத் தனக்குச் சிறப்பாக வாய்த்த வரலாற்று உணர்வால் கண்டறிந்து வெளிப்படுத்துகின்றார். அவை வருமாறு:

1.பல்லவர் காலத்தில் கடல் வணிகம் மிகவும் சிறப்புடன் நடைபெற்றது.

(எ-கா) காரைக்கால் அம்மையார் புராணம்

2.பல்லவர் காலத்தில் அந்தணர்கள் வடஇந்தியாவிலிருந்து குடிபெயர்ந்து தமிழ்நாடு போந்து பல சிற்றூர்களை அமைத்துக் கொண்டு வாழ்ந்தனர். அவை மறையவர் கிராமங்கள் என்று அழைக்கப்பட்டன.

(எ-கா) தில்லை, திருவெண்ணை நல்லூர்

3.பல்லவர் காலத்தில் உடன்கட்டை ஏறும் வழக்கம் நாடு முழுவதும் பரவலாகக் காணப்பட்டது.

(எ-கா) அப்பரின் தாயார் உடன்கட்டை ஏறிய நிகழ்வு

4.புற சமயத்தவர்களான சமணர்கள் கழுவில் ஏற்றி தண்டிக்கப் பட்டனர்.

(எ-கா) பல்லவன் மகேந்திரவர்மன் சமணர்களைக் கழுவில் ஏற்றியது.

5.அக்காலத்தில் நாடு முழுவதும் சிவனடியார்கள் பரவலாக வாழ்ந்தனர்.

(எ-கா) சிவயோகியார், மாவிரதியர், கபாலிகர், காளாமுகர்

6.நாடு முழுவதும் அடியார்களுக்குச் சமயப் பயிற்சி அளிக்க அமைப்புகள் இருந்தன.

(எ-கா) கணநாதரின் சமயப் பயிற்சி

7.சேக்கிழார் வாதாபி போர் குறித்துத் தெளிவாகக் கூறாவிடில் திருஞான சம்பந்தர் காலத்தைக் கணிக்கவியலாமலே போயிருக்கும்.

8.மகேந்திரவர்மனின் குணபர ஈஸ்வரம் கோயிலைப் பற்றி குறிப்பிடாவிடில் அப்பரின் காலத்தைப் பற்றி அறிந்திருக்கவியலாது.

## முடிவுரை

ஒரு இலக்கியவாதி தலைச் சிறந்தவர் என்று கருதப்பட்டால் அவரது படைப்புகள் யாவும் அனைவராலும் கொண்டாடப்படும். அவ்வாறு அவரால் படைக்கப்படும் இலக்கியங்கள் அமரத்தன்மை பெரும். அவ்விலக்கியங்கள் கால வெள்ளத்தில் அழியாமல் மக்கள் மனதில் நின்று வாழும். அந்த வகையில் தமிழில் தோன்றிய தலைசிறந்த படைப்புகளில் பெரிய புராணமும் ஒன்றாகத் திகழ்கின்றது. அந்நூல் காலத்தை வென்று இன்று வரை அனைவர் உள்ளங்களிலும் நிலைத்து நிற்பதற்கு அதனுள் கையாளப்பட்டிருக்கும் பல்வகைச் சிறப்புக் கூறுகளே காரணமாகும். இதன் நூலாசிரியரான சேக்கிழார் பெருமான் இந்நூலில் அரசியல், பொருளாதார, சமூக, சமயம் மற்றும் பண்பாடு போன்ற பல்துறைகளில் தன் கைவண்ணத்தைக் காண்பித்துள்ளார். முதலமைச்சர் என்ற நிலையில் நாட்டின் அனைத்துச் செய்திகளை அறியவும், அனைத்துக் நூல்களை வாசிக்கவும், அனைத்து கலைகளையும் பயிலவும் அவருக்கு வாய்ப்பு கைவரப்பெற்றது. தனக்குக் கிடைத்த அனைத்துத் நற்பேறுகளையும், அனைத்து திறன்களையும் தன் நூலில் செம்மையுடன் கையாண்டு வெற்றி கண்டார்.

சேக்கிழார் கலை, நுண்கலை, இலக்கியம், வரலாறு போன்ற அனைத்துத் துறைகளிலும் அவர் வல்லவராகத் திகழ்ந்து அவற்றையெல்லாம் சிறப்புறத் தம்நூலில் பயன்படுத்தியுள்ளார். ஒரு இலக்கியவாதி எல்லாத் துறையிலும் வல்லவராகத் திகழ்ந்து வெற்றி காண்பதென்பது மிகவும் அரிதான நிகழ்வாகும். அவ்வாறு ஒரு அரிதானவராகச் சேக்கிழார் திகழ்ந்தார். தனக்குக் கிடைத்த உயரிய அரசு பதவியைக் கொண்டு தன்

திறன்களை வளர்த்துக் கொண்டும், அனைத்து நுட்பங்களையும் அறிந்து கொண்டும், மாபெரும் மேதையாக இலக்கிய உலகில் சேக்கிழார் வாழ்ந்தார். அன்னாரைப் போன்று பல்திறன் வாய்ந்த இலக்கிய மேதை தமிழுலகில் காண்பதரிது என்பதால் இவர் வராது வந்த மாமணியாவார். அவருடைய புகழுக்கும், பெருமைக்கும், சிறப்புக்கும், மேன்மைக்கும், மேதமைக்கும் அவரது பல்திறன்களே காரணம் என்றால் அது மிகையன்று.

## References


Subramanya Mudaliar CK., (1937), Periya Purana, Coimbatore Tamil Sangam, Coimbatore.

Subramanya Mudaliar CK., (1960), Chekkijar Semmanith Thiral, Coimbatore Tamil Sangam, Coimbatore.

Mahadeva Mudaliar W., (1970), Great Mythological Research, Saiva Siddhanta Nurupathippuk Kazhagam, Chennai.

Subramanya Pillai ka., (1963), History of Cheikh Swamis and Great Mythological Research, Saiva Siddhanta Nurupathippuk Kazhagam, Chennai.

Rasamanikkam Pillai Ma., (2002), Great Mythological Research, Alamu Publishing, Chennai.

Gnana Sammanthan AS., (1987), A Study of the Great Myth, Center for Philosophy, University of Tamil Nadu, Kanchipuram.



**Funding:** NIL

**Acknowledgement:** NIL

**Conflict of Interest:** NIL



**About the License:**

Attribution 4.0 International (CC BY 4.0)

© The author 2020. The text of this article is licensed under a Creative Commons Attribution 4.0 International License